பேசும்போது போளூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கப்படும் என்ற உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே போளூர் மைய பகுதி என்ற அடிப்படையிலே, வட ஆற்காடு, அம்பேத்தார் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களில் இரண்டிலும் அதிகப்படியாக போளூரில் 70,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்ற காரணத்தினாலும், அதிகமான பால் உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தியின் சங்கத்தை இயக்கி உள்ள ஒன்றியம் என்ற அடிப்படையிலேயும் அதை மறுபரிசீலனை செய்து போளூரிலே பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணங்களுக்கு மதிப்பளித்து, இது குறித்து மறு ஆய்வு செய்யப்படும். மறு ஆய்வு முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 52, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

52—

சேலம் அரசினர் விழியிழந்தோர் பள்ளிக்கு வசதிகள் அளித்தல்

*22296—**திரு. கே. கந்தசாமி :**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசினர் விழியிழந்தோர் பள்ளியில் அடிப்படை வசதிகள் இல்லாமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்வசதிகள் செய்ய எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அடிப்படை வசதியுடன் மிக நல்ல முறையிலே இயங்கி வருகிறது. ஆகவே இவ்வினாவிற்கு இடமில்லை.

1995 மார்ச் 17]

முற்பகல் 10-45

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்கு வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லை. எனவே, அந்தப் பள்ளிக்கு அதிகப்படியாக குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குடிநீர் வசதி மிக நல்ல முறையில் உள்ளது. ஏற்கெனவே ஒரு ஆழ்துளைக் கிணறு மூலமாக நகராட்சியினுடைய குடிநீர் சப்ளை உள்ளது. தேவைக்கேற்றவாறு உள்ளாட்சித் துறை அதைக் கவனித்து மிக நல்ல முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அங்கிருந்து எந்தவிதமான தகவலும், தண்ணீர் குறைவாக கிடைக்கிறது என்கிற அடிப்படையில் வரவில்லை. ஆகவே, மிகச் சிறப்பாக இயங்குவதால், அப்படிப்பட்டத் தகவல் எதுவும் இல்லாததால் இப்போது அதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுத் தொகை அதிகப்படுத்திக் கொடுக்கப்படுமா? தற்போது அந்தப் பள்ளியில் 8-வது வகுப்புவரைதான் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது மாணவர்கள் மேலே படிக்க வேண்டுமானால், சென்னை போன்ற நகரங்களுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. எனவே, அந்தப் பள்ளியில் 10-வது வகுப்புவரை பாடம் சொல்லிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ஒரு பள்ளியிலே அப்படிப்பட்ட நிலைமைகளை புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்தி வருகிறார்கள். தேவைக்கேற்ப அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 நாட்களுக்கு முன்னாலே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த தின விழாவை முன்னிட்டு, அந்தப் பள்ளிக்கு சட்ட அமைச்சர், வீட்டுவசதித் துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர், ஆகிய

நான்கு அமைச்சர்களைக் கூட்டிச் சென்று அந்தப் பள்ளியிலே எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அன்றையதினமே அந்தப் பள்ளிக்கு மேட்டூர் தண்ணீருக்கான ஒரு குழாய் இணைப்பு வேண்டுமென்று காலையிலே கேட்டவுடன், மாலையிலேயே அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. அன்றையதினமே கனக்ஷென் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் அந்தப் பள்ளியிலே இன்றையதினம் கோவை மாவட்டம், நீலகிரி மாவட்டம், பெரியார் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டம் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த குழந்தைகள் படிக்கிறார்கள். ஆகவே, அங்கே 8–வதிலிருந்து 10-வது வரை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அங்கேயிருந்து திருச்சிக்கும், சென்னைக்கும் வரவேண்டிய காரணத்தினால் அந்தக் கோரிக்கையை மட்டும் நிறைவேற்றித் தருவார்களா என்று இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் விழியிழந்தோர் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் முதற்கொண்டு பள்ளிக்கூடங்களில் அதிகப்படியான வகுப்பறைகள் தொடங்குவதற்கும், அங்கே அதிகமான வகுப்புகளின் மூலமாக அந்தப் பிள்ளைகள் படிப்பதற்கும் அனைத்து வசதிகளையும் புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஒரு பள்ளி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே இந்தப் பள்ளியும் சில ஆண்டுகளுக்குள்ளே எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 53, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

53—

பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்தல்

**36186—திரு. வெ. பழனிசாமி:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—